**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண். 74/2018**

2023 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 26–ம் நாள் செவ்வாய்க்கிழமை என்பவரது சாட்சியின் வாக்குமூலம், 1873 ஆம் ஆண்டு இந்திய சாட்சியசட்டப் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு T. சோழவேந்தன் B.A.,B.L., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 26.09.2023 | தந்தை/கணவர் பெயர்: | கஞ்சமலை |
| பெயர்: | கருணாகரன் (PW-1 Cross ) | தாலுக்கா: | சீர்காழி |
| கிராமம்: | அல்லிவிளாகம் | சமயம்: | |
| சாதி: | | வயது : | 64/2023 |
| தொழில்: | | | |

**குறுக்கு விசாரணை : 26.09.2023**

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யபப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

எனது தகப்பனார் கஞ்சமலைக்கு 4 ஆண்கள் மற்றும் 2 பெண் மக்கள் ஆவார்கள். அவர்கள் கருணாகரன், மனோகரன், இளங்கோவன், இளவரசன், தமிழரசி, கலையரசி ஆவார்கள். இவர்கள் அனைவரும் உயிருடன் தான் உள்ளார்கள் என்றால் சரிதான். அனைவரும் அல்லிவிளாகத்தில் வசித்து வருகிறார்கள். இளவரசன் மட்டும் சிங்கப்பூரில் பணிபுரிந்து வருகிறார். தமிழரசி அனுமந்தபுரத்தில் வசித்து வருகிறார். கலையரசி கும்பகோணம், விளந்தகண்டத்தில் வசித்து வருகிறார். அவர்களை இவ்வழக்கில் வாதிகளாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். தாவா சொத்திற்கு எங்கள் பெயரில் பதிவு செய்யப்பட்ட கிரய பத்திரம் இல்லை என்றால் சரியல்ல. அதை தாக்கல் செய்யலாம் என்றால் தாக்கல் செய்யலாம். கஞ்சமலை இருக்கும் வரையில் தாவா

சொத்தை பொறுத்து பிரதிவாதிகளின் பெயரில் எவ்வித சட்ட நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். பதிவு செய்யப்பட்ட பத்திரம் யார் பெயரில் உள்ளது என்றால் எனது தகப்பனார் பெயரில் உள்ளது. எவ்வாறு பாத்தியம் என்றால் நீதிமன்ற ஏலம் மூலம் பாத்தியம். எப்போது எந்த தேதி எந்த மாதம் எந்த வருடம் ஆவணம் ஏற்பட்டது என்றால் தெரியாது. மேற்படி ஆவணம் இவ்வழக்கில் தாக்கல் செய்ய இயலுமா என்றால் இயலும். நான் சொல்வது போல் எந்த ஆவணமும் இல்லை என்றும் அவ்வாறு தாக்கல் செய்யாத காரணத்தினால் தாவா சொத்து எங்களுக்கு பாத்தியப்பட்டது அல்ல என்றாலும் சரியல்ல. எனது தகப்பனாருடன் உடன்பிறந்தவர்கள் 2 நபர்கள். அவர்கள் கோவிந்தசாமி மற்றும் அரங்கசாமி. எனது தாத்தா பெயர் சுப்பையா என்றால் சரிதான். சுப்பையா, வீராசாமி, திருவேங்கடம், சொக்கலிங்கம் மற்றும் ஆறுமுகம் ஆகியோர்கள் நாராயணசாமியின் மகன்கள் என்றால் சரிதான்.

வீராசாமியின் மகன்கள் தான் முருகேசன் மற்றும் சுப்ரமணி என்றால் சரிதான். மேற்படி முருகேசனின் மகன்கள் தான் பிரதிவாதிகள் என்றால் சரிதான். நாராயணசாமி சம்பாதித்த சொத்துக்கள் தான் வைத்துள்ளோம் என்றால் சரிதான். நாராயணசாமி சம்பாதித்த சொத்துக்கள் காரைமேடு, செம்பதனிருப்பு மற்றும் இராதாநல்லூர் ஆகிய கிராமங்கள் உள்ளது என்றால் சரிதான். மேற்படி 3 கிராமங்களில் உள்ள மொத்த நிலங்களும் சுமார் 48 ஏக்கர் என்றால் சரிதான். நாராயணசாமியின் வாரிசுகள் சொத்துக்களை பொறுத்து எவ்விதமான பதிவு செய்யப்பட்ட பாகப்பிரிவினை ஏற்படுத்திகொள்ளவில்லை என்றால் சரிதான். எங்கள் தாத்தா மற்றும் எனது தகப்பனாருக்கும் எவ்விதமான பதிவு செய்யப்பட்ட பாக பத்திரம் எற்படவில்லை என்றால் சரிதான். 1-ம் பிரதிவாதியின் தாயார் பெயர் சரஸ்வதி என்றால் சரிதான். இவ்வழக்கின் பிரதிவாதிகள் மீது ஏற்கனவே இரண்டு சிவில் வழக்குகள் நிலுவையில் இருந்து வருகிறது. அசல் வழக்கு எண்.116/2014-ல் எங்கள் பூர்வீக சொத்துக்கள் பொறுத்து பிரதிவாதியாக 67 நபர்களை சேர்த்து பாகப்பிரிவினை வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

அவ்வழக்கு தற்சமயம் அசல் வழக்கு எண்.182/2023 ஆக புதிய எண்ணிடப்பட்டு சீர்காழி சார்பு நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டுள்ளது என்றால் சரிதான். அரங்கசாமி மகன் மகேஷ் என் பெயரில் என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அவ்வழக்கு எனது சாதகமாக தீர்ப்பு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அவ்வழக்கு சொத்தும் இந்த வழக்கு சொத்தும் தொடர்பில்லாதது. வா.சா.ஆ.1. எனது தகப்பனார் பெயரில் எப்போது ஏற்பட்டது என்றால் 1987 ஆம் வருடம் ஆகும். எனது தகப்பனார் பட்டாப்படி தாவா சொத்துக்களை பொறுத்து எவ்வித ஆவணமும் ஏற்படுத்தாமல் இறந்துவிட்டார் என்றால் சரிதான். தாவா சொத்துக்களை நான் அனுபவித்து வருவது குறித்து எவ்வித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு வடக்கில் சரஸ்வதிக்கு சொந்தமான நிலங்கள் உள்ளது என்றால் சரிதான். எனக்கும், பிரதிவாதிகளுக்கும் இடையே குற்ற வழக்கு நிலுவையில் இருந்து வருகிறது என்றால் சரிதான்.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.